மேல்நெமிலி ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி.ஏ.மாரியம்மாள்,

ஆணை எண்.2/2024

நாள்: 21.02.2024

பொருள் : மனைப்பிரிவு – மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம் – மேல்நெமிலி ஊராட்சி –மேல்நெமிலி கிராமம் – சர்வே எண். 17/2B2–ல் 1.70 ஏக்கர் (அ) 6900 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ஒப்புதல் வரப்பெற்றது – இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – சார்பு.

பார்வை :

1. அரசாணை நிலை எண். 18 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.02.2019 மற்றம் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020.
2. அரசாணை நிலை எண். 138 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:04.06.2004.
3. அரசாணை நிலை எண். 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:04.05.2017.
4. அரசாணை நிலை எண். 141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை **UD4(3)** நாள்:23.09.2020.
5. அரசாணை நிலை எண். 181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை **UD4(1)** நாள்:09.12.2020.
6. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் ந.க.எண்: 25/2024**TCP** நாள்: 16.02.2024.
7. அரசு கணக்கில் நில பயன்மாற்ற கட்டணம் செலுத்திய நாள்: 19.02.2024 மற்றும் வளர்ச்சி கட்டணம் மேல்நெமிலி ஊராட்சி செலுத்திய நாள்:19.02.2024
8. மேல்நெமிலி ஊராட்சி தீர்மான எண்: 2 நாள்:19.02.2024.

உத்தரவு.

பார்வை 1 முதல் 5 வரை உள்ள அரசாணைகளில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 6–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் கடிதத்தின்படி மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், மேல்நெமிலி ஊராட்சி – மேல்நெமிலி கிராமம் – சர்வே எண். 17/2**B2**–ல் 1.70 ஏக்கர் (அ) 6900 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைபிரிவிற்கு ஒப்புதல் வரப்பெற்றுள்ளது.